# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 147 | திங்கள் Monday | 24.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# உலகை ஈர்க்கும் சூழல் இந்திய விண்வெளி துறைக்குத்தேவை

## பிரதமர் நரேந்திர மோடி பேச்சு



புது டெல்லி: விண்வெளித் துறையின் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது, விண்வெளித் துறை ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் அரசின் மீது நம்பிக்கை வைத்துள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

20 விண்வெளித் துறை ஸ்டார்ட்-அப் நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள் மற்றும் நிறுவனர்களு டனான உரையாடலின் போது பேசிய பிரதமர்மோடி, ஒருபுதிய துறையில் நீங்கள் துணிச்சலை வெளிப்படுத்தியுள்ளீர்கள். மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், நீங்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளீர்கள். நாம் எடுக்கும் முடிவுகள் எதுவாக இருந்தாலும், அதில் நிலைத்தன்மை இருக்க வேண்டும் என்பதே எப்போதும் எனது நிலைப்பாடு. அவற்றை நாம் அடிக்கடி மாற்றிக்கொண்டிருக்கக் கூடாது; அப்போதுதான், புதிய முயற்சி எடுக்க முன்வருபவர்கள் ஒருவித உறுதியை உணர முடியும். அதாவது, தங்கள் சொந்தத் தவறால் ஏதேனும் தவறு நடந்தால் அது வேறு விஷயம், ஆனால் யாரும் அவர்களைக் கைவிடமாட்டார்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கும். அந்த நம்பிக்கையைத்தான் நாங்கள் உருவாக்க முயற்சிக்கிறோம். தங்கள் வாழ்க்கையை உருவாக்க விரும்பும் உலகம் முழுவதிலும் உள்ளவர்கள், இந்தியாவிற்கு வந்து ஒரு இந்திய ஸ்டார்ட்-அப் நிறுவனத்திலோ அல்லது இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்திலோ (ISRO) இணைய வேண்டும் என்று நினைக்கும் வகையிலான ஒரு சூழலை நாம் உருவாக்க வேண்டும். இந்தத் திறமையாளர்கள் அனைவரையும் நம்மால் ஈர்க்க முடியும் என்றும், அது நமக்கு ஒரு மிகப்பெரிய பலமாக அமையும் என்றும் நான் உறுதியாக நம்புகிறேன். செலவு அடிப்படையில் நாங்கள் மிகவும் போட்டித்தன்மை வாய்ந்தவர்களாக இருக்கிறோம். நம் திறமையில் எந்தச் சந்தேகமும் இல்லை. மேலும்,நம் நாட்டு மக்களிடம் இயல்பாகவே இடர் ஏற்கும் திறன் அதிகமாக இருப்பதால், இத்துறையில் நமக்கென ஒரு தனித்துவமான இடத்தை விரைவாக உருவாக்கிக்கொள்ள முடியும்.

விண்வெளித் துறை நிறுவனங்களுக்கும் பிற துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களுக்கும் இடையே அதிக அளவிலான ஒத்துழைப்பு இருக்க வேண்டும். விண்வெளி குப்பைகளை அகற்றுவது தொடர்பான பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் சுற்றுச்சூழல் அமைப்புகளுடன் இணைந்து செயல்படலாம். விண்வெளி தொழில்நுட்ப நிறுவனங்கள் வேளாண் பல்கலைக்கழகங்கள் மற்றும் வேளாண் துறைகளுடன் இணைந்து விவசாயிகளுக்குச் சிறந்த முடிவுகளை எடுக்கவும் விளைச்சலை அதிகரிக்கவும் உதவலாம் என்றார்.

# த.வெ.க. ஆட்சியில் விவசாயிகள் பாதிப்பு; எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் குற்றச்சாட்டு



தஞ்சாவூரில்நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில்எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டார். மணமக்களை வாழ்த்திய அவர், நிகழ்ச்சியில் பேசும்போது தவெக அரசை கடுமையாக சாடினார். அவர் பேசியது பின்வருமாறு;

"தவெக ஆட்சியில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாய பயிர்க்கடனை தள்ளுபடி செய்ய நிதி இல்லை என தவெக அரசு கூறுகிறது. வறட்சி நிவாரணம் கோரிய விவசாயிகளுக்கு தவெக அரசு இதுவரை பதில்கூறியதா? விவசாயிகளுக்கு கொடுக்க நிதி இல்லை எனக் கூறும் அரசு, எம்.எல்.ஏ.க்களுக்கு கார் கொடுக்க மட்டும் நிதி உள்ளதா?


மக்கள், விவசாயிகள் பிரச்சினைகள் குறித்த கேள்விகளுக்கு சட்டசபையில் பதில் இல்லை. முதல்-அமைச்சர் பதில் கூறவில்லை. அமைச்சர்கள் சம்பந்தம் இல்லாமல் பதில் கூறுகின்றனர். தவெக அரசு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை.தேர்தல்வாக்குறுதிகளை நிறைவேற்று வது குறித்த கேள்விகளுக்கு அரசு கஜானாவை காலியாக்கிவிட்டு சென்றதாக கூறுகின்றனர்.

பிரச்சினைகளை திசை திருப்பும் நோக்கில் அமைச்சர்கள்பதில்அளித்து வருகின்றனர்.தவெக ஆட்சியின் கோமாளித்தனத்திற்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள். விகா திமுக ஆட்சிக் காலத்தில் வழக்கமாக ஜூன் 12-ஆம் தேதி அல்லது அதற்கு முன்பாகவே மேட்டூர் அணை நீர் பாசனத்திற்காகத் திறக்கப்படும். ஆனால்,இந்ததவெக ஆட்சியில் ஆகஸ்ட் மாத இறுதி வரை காவிரிடெல்டாபாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து உரிய நேரத்தில் தண்ணீர் திறக்கப்படா ததால் குறுவை சாகுபடி முற்றிலுமாகப் பொய்த்துப் போய் விவசாயிகள் நஷ்டத்தைச் சந்தித்துள்ளனர்ர்வாங்குவதில் காட்டும் வேகத்தை, விவசாயிகளுக்கான நிதியைக் கொண்டு சேர்ப்பதில் காட்ட வேண்டும் என்றும் விமர்சித்துள்ளார். இந்தமக்கள்விரோத முடிவை எதிர்த்து, திமுக தலைவரும் கட்சித் தலைவருமானமு.க.ஸ்டாலின் ஆலோசனையின்படி, திமுக எம்.எல்.ஏ-க்கள் யாரும் அரசுவழங்கும்புதிய காரைப் பெறமாட்டார்கள் என்று அறிவித்துள்ளார்பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு அரசு உடனடியாக வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்று உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டு 2 மாதங்கள் கடந்த நிலையிலும், அந்த நிதி இதுவரை விவசாயிகளைச் சென்றடையவில்லை என்றும், அரசு இந்த விஷயத்தில் தொடர் மெத்தனப் போக்கையும் அலட்சியத்தையும் காட்டி வருகிறது என்றும் சாடியுள்ளார்.

வசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்யவோ அல்லது வறட்சி நிவாரணம் வழங்கவோ அரசிடம் நிதி இல்லை என்று கூறும் தவெக அரசு, ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு (MLAs) புதிய கார்கள் வழங்குவதற்கு மட்டும் எவ்வாறு நிதி ஒதுக்கியது என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இவ்வாறு அவர் பேசினார்.

# தமிழகத்தில் 13 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு; வானிலை மையம் எச்சரிக்கை



சென்னை:சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம்,கள்ளக்குறிச்சி, கடலூர், சேலம், மதுரை மற்றும் திருப்பத்தூர் ஆகிய 13 மாவட்டங்களில் (ஆகஸ்ட்24)இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன்கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

அதன் அறிக்கை: தமிழக கடலோரப்பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் ஒரு பலவீனமான காற்றழுத்தத் தாழ்வுப் பாதை நிலவுகிறது. மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம்,கள்ளக்குறிச்சி, கடலூர், சேலம், மதுரை மற்றும் திருப்பத்தூர் ஆகிய 13 மாவட்டங்களில் இன்று (ஆகஸ்ட் 23) இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் மிதமான மழை பெய்யக்கூடும்.

கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும்நீலகிரிமாவட்டத்தில் ஓரிரு இடங்களில் நாளை (ஆகஸ்ட் 24) இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் கனமழை பெய்யக்கூடும்.அதேபோல் ஏனைய மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், செங்கல்பட்டு, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர்,திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், சேலம், மதுரை மற்றும் திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஆக., 25ம் தேதி

கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும்நீலகிரிமாவட்டத்தில் ஓரிரு இடங்களில் நாளை மறுநாள் (ஆகஸ்ட்25)இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் கனமழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும். மீனவர்களுக்கான எச்சரிக்கை

தமிழககடலோரப்பகுதிகள், தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் இன்று முதல் ஆகஸ்ட் 27ம் தேதி வரை சூறாவளி க்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# கட்டிடத் தொழிலாளர் சங்க மாநாடு: உதவித்தொகை வழங்காத அதிகாரிகளை நீக்க வேண்டும் உட்பட 10 தீர்மானங்கள் நிறைவேற்றம்



தமிழ்நாடு ஏ.ஐ.டி.யு.சி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் இராணிப்பேட்டை 2-வது மாவட்ட மாநாடு, ஞாயிற்றுக்கிழமை (ஆகஸ்ட் 23) அம்மூர் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மாவட்டத் தலைவர் எஸ். சாம்பசிவம் தலைமையில் நடைபெற்றது.

மாநில துணைப் பொதுச் செயலாளர் எம். மு னுசாமி மாநாட்டு கொடியேற்றி நிகழ்வைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் ஏ.எஸ். சங்கர் மேஸ்திரி வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் எஸ்.ஜி. தீபா குணசேகரன் வரவு செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தனர். உடன் மாவட்ட துணை தலைவர் எம். முருகானந்தம், பாஷா பாய் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மாநாட்டின் போது சங்க நிதியிலிருந்து, கட்டுமான பணியின் போது உயிரிழந்த தொழிலாளர்களான காஞ்சனா மற்றும் கார்த்திக் ஆகியோரின் குடும்பத்தினருக்கு முதற்கட்டமாக தலா 5,000 நிதியுதவி வழங்கப்பட்டது.

நிறைவேற்றப்பட்டதீர்மானங்கள் :

வாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு உரிய உதவித்தொகையை வழங்காமல் தாமதப்படுத்தும் அதிகாரிகளை உடனடியாகப் பணியிலிருந்து நீக்க வேண்டும்.வீடு இல்லாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டு மனை வழங்கி, அதில் 6 சதுர அடியில் வீடுகட்டித் தர வேண்டும்.கட்டுமானத்தொழிலாளர்களுக்கு மாத ஓய்வூதியமாக ரூ. 6 ஆயிரம் வழங்கதமிழகஅரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஓய்வூதியம் பெற்று வரும் தொழிலாளி உயிரிழந்தால், அவரது குடும்பத்திற்கு ரூ. 55 ஆயிரம் மரண உதவித்தொகையாக வழங்க வேண்டும். சிமெண்ட், ஜல்லி, எம்-சாண்ட், கம்பிகள், பெயிண்ட் மற்றும் மரம் உள்ளிட்ட கட்டுமானப் பொருட்களின் விலையைக் குறைப்பதோடு, அவற்றின் மீதான ஜி.எஸ்.டி வரியை முழுமையாக ரத்து செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் நடைபெறும் அனைத்துவிதமான கட்டுமானப் பணிகளிலும் தமிழகத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கே முதல் உரிமை வழங்க வேண்டும்

உள்ளிட்ட 10 தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.மாநாட்டின் நிறைவாக மாவட்டத் துணைச் செய லாளர் ஜி. கோபி நன்றி கூறினார்.

புதிய நிர்வாகிகள் :

மாவட்ட தலைவராக எஸ். சாம்பசிவம், மாவட்ட செயலாளராக ஏ.எஸ். சங்கர் மேஸ்திரி, மாவட்ட பொருளாளராக எஸ்.ஜி.தீபாகுணசேகரன் உள்ளிட்ட9பேர்கொண்ட மாவட்ட குழு தேர்வு செய்யப்பட்டது.



மதுரை மாவட்டம், மாநகராட்சி தத்தனேரி மற்றும் கோச்சடையில் ரூபாய் 19.90 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இரண்டாம் கட்ட திடக்கழிவு இடமாற்றும் நிலையத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., அவர்கள்,மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.கல்லாணை அவர்கள்,மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.எம்.கோபிசன் அவர்கள்,மாநகராட்சி மேயர்(பொ)/துணை மேயர் திரு.தி.நாகராஜன் அவர்கள்,மாநகராட்சி ஆணையாளர் திரு. கௌரவ் குமார்,இ.ஆ.ப., அவர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடன் உள்ளனர்



மதுரை மேலூர் மாதவ் சர்க்கரை நோய் மருத்துவ மையம் நிறுவனர் டாக்டர் எஸ் எம் முருகப்பன் வானதி இல்ல திருமண விழா மதுரை பாண்டி கோவில் அருகில் உள்ள துவாரகா பேலஸ் திருமண மண்டபத்தில் இனிதே நடைபெற்றது மணமக்கள் டாக்டர் எஸ் எம் ப்ரீத்தம் மணமகள் டாக்டர் எம் ராஜி ஆகியோரது திருமணம் சிறப்பாக பெரியோர்கள் முன்னிலையில் நடைபெற்றது இவ்விழாவிற்கு பல்வேறு மருத்துவ நிபுணர்களும் மருத்துவமனை ஊழியர்களும், உறவினர்களும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### ஆடி மாதத்தில் தள்ளுபடி, அட்சய திதிக்கு நகை வாங்குதல், போன்று வாஸ்து நாளில் புதிய வீட்டுக்கு அடிக்கல் நாட்டுவோம், எனும் தலைப்பில் புதியவீடு கட்ட பூமி பூஜை

# கார்த்திபுரம் பகுதியில் 101 வாடிக்கையாளர்கள் ஒரே நேரத்தில் பூமி பூஜை செய்தனர்




கோவை நீலாம்பூர் பகுதியில், கார்த்திபுரம் எனும் வீட்டு மனை பிரிவுகள் அறிமுக படுத்த பட்டு விற்பனையும் நிறைவு பெற்றுள்ளது. அவ்வாறு விற்பனை செய்ய பட்டுள்ள இந்த பகுதியில், வீட்டு மனைகளை வாங்கிய வாடிக்கையாளர்கள்,சுமார்,101 பேர் ஒரே நேரத்தில், தாங்கள் வாங்கிய இடத்தில் வீடுகட்ட, பூமி பூஜை செய்தனர். கோவை நீலாம்பூர் பகுதியில், கார்த்தி புரம் எனும் வீட்டுமனைபிரிவுகள் பிரிக்க பட்டு சுமார் 4000 விட்டு மனைகள் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்ய பட்டுள்ளது.இந்த பகுதியில் வீடு கட்ட வாடிக்கையாளர்கள் தயாராக உள்ளநிலையில் அதற்கான பூமிபூஜை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது இதனை சின்னத்திரை நட்சத்திரம் ஈரோடு மகேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு துவக்கி வைத்தார். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய ஈரோடு மகேஷ் மற்றும் கார்த்திபுரம் ரியல் எஸ்டேட் உரிமையாளர் கார்த்திகேயன் ஆகியோர் கூறியதாவது..

எதிலும் புதுமையை எதிர்பார்க்கும் மக்களுக்காக உருவாக்க பட்டது தான் இந்த கார்த்தி புரம், வீட்டு மனைகள், முதல் முறையா 200 ஏக்கரில் சைட்களை பிரிச்சு, வடிவமைக்கப்பட்டுள்ளது, விமான ஓடுதளம் போன்ற சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. பூமிக்கு அடியில் செல்லும் மின்கம்பிகள், மேல்நாட்டு வடிவமைப்பில், ஒவ்வொரு சைட்டுக்கும் தனித்தனியாக உருவாக்க பட்ட, சாக்கடை கால்வாய்,நீர்நிலை குழாய்கள், தென்னிந்தியாவிலேயே முதல் முறையாக இந்த வித்தியாசமான வீட்டு மனைகளை அறிமுகம் செய்துள்ளதாக தெரிவித்ததுடன், இங்கு வீட்டு மனைகளை வாங்கிய வாடிக்கையாளர்கள் ஒரே நேரத்தில் 101 பேர் வீடுகள் கட்ட பூமி பூஜை போட்டுள்ளது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்றார், கோவையின் அடையாளம் காந்திபுரம் என்று மக்கள் கூறும் நிலையில், காந்திபுரத்திற்கு அடுத்த படியாக இந்த கார்த்தி புரம் அமைந்துள்ளது என்று தெரிவித்தார்.

# இளம் தலைமுறையினரின் சிந்தனையில் சமூக மாற்றம் கோவையில் குட்டி டைரக்டர் சீசன் 2 நிகழ்ச்சி

## சிறந்த குறும்படங்களை திரையிட்டு விருதுகளை தட்டி சென்ற இளைஞர்கள்



இளம் தலைமுறையினருடைய சமூகமாற்றத்திற்கான சிந்தனைகளையும், படைப்பாற்றலையும் உருவாக்கும் நோக்கத்தில், கோவையில் குட்டி டைரக்டர் எனும் இரண்டாம் பதிப்பு குறும்பட போட்டிகள் நடைபெற்றது. கோவை எல் அண்ட் டி பைபாஸ் சாலையில் உள்ள கார்ஸ் 327 ஷோரூம் வளாகத்தில் நடைபெற்ற இந்தநிகழ்ச்சியில், கார்ட்ஸ் 327 நிறுவனத்தின் நிறுவனர் விஷ்ணுகோபால் குத்து விளக்கு ஏற்றி வைத்து நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். இதில் தமிழகத்தின்பல்வேறுமாவட்டங்களில் இருந்து இளம் படைப்பாளர்கள் , ஆர்வத்துடன் பங்குபெற்றனர். குறிப்பாக, கோவை மட்டுமின்றி, சென்னை, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, விழுப்புரம், உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். இளைஞர்களின் சிந்தனை மற்றும் படைப்பாற்றலை மையமாக குறும்பட போட்டிகள் நடத்தப்பட்டது. சினிமா என்பது வெறும் பொழுதுபோக்குக்கான ஊடகம் மட்டுமின்றி, சமூகத்தின் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய சக்தி வாய்ந்த கருவி என்பதை இளம் தலைமுறையினருக்கு உணர்த்தும் வகையில் இப்போட்டிகள் அமைந்தது. போட்டியாளர்கள் தங்களது தனித்துவமான சிந்தனையையும், சமூகத்தின் மீதான அக்கறையையும் குறும்படம் மூலம் வெளிப்படுத்தினர். இந்த போட்டியில் சிறப்பாக செயல்பட்ட படைப்பாளர்களுக்கு முதல் பரிசாக 25 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 15 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக 7500 ரூபாயும் வழங்கப்பட்டது.மேலும் போட்டியாளர்களின் பல்வேறு திறமைகளை அங்கீகரிக்கும் வகையில் சிறந்த இயக்குனர், சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த சினிமாபோட்டோகிராபி, சிறந்த எடிட்டிங், சிறந்த குழந்தை நட்சத்திரங்கள் என பல்வேறு விருதுகளும் வழங்கப்பட்டது. இந்த விழாவில் திரைப்பட இயக்குனர் ரமேஷ் முருகன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு போட்டியாளர்களை பாராட்டி அவர்களின் திரைப்பட பயணத்திற்கு வாழ்த்துக்கள் தெரிவித்திருந்தடன், குறும்படங்களை கண்டு ரசித்து சிறந்த குறும்படத்தை தேர்வு செய்து, பரிசுகளும் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோவை வ.உ.சி. பூங்கா பகுதியில் அமைந்துள்ள ஸ்டேன்ஸ் பள்ளியின் 164வது ஆண்டு விழா கோலாகல கொண்டாட்டபட்டது

## இதில் கல்வியில் சிறந்த செயல்பாட்டிற்கான 'ஹவுஸ்' விருது மாணவர்களின் அணிக்கு வழங்கப்பட்டது



கோவை வ உ சி பூங்கா பகுதியில் உள்ள ஸ்டேன்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி, தனது நீண்டகாலக் கல்விப் பாரம்பரியம் மற்றும் மாணவர்களின் சாதனைகளை முன்னிலைப்படுத்தும் வகையில் தனது 164-வது ஆண்டு விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடியது.

மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் களைகட்டிய இந்நிகழ்ச்சியில் ஸ்டேன்ஸ் கல்வி நிறுவனங்களின் தலைவர் மெர்சி ஓமன், தாளாளர் பிலிப் ஆர்.ஜே. ஃபவுலர், நிர்வாக குழு உறுப்பினர் சுசிதா ராமச்சந்திரன் தலைமை நிர்வாக அதிகாரி வி.எம்.ஜான், ஸ்டேன்ஸ் பள்ளி ஆங்கிலோமேல்நிலைப்பள்ளியின் முதல்வர் பி.ஏ.ஜான் ஸ்டீபன், ஸ்டேன்ஸ் சிபிஎஸ்இ பள்ளி முதல்வர் ஐலீன் ஜெத்ரோ, ஸ்டேன்ஸ் ஐசிஎஸ்இ பள்ளி முதல்வர் ஜெனட் ஜெயப்பிரகாஷ் மற்றும் ஸ்டேன்ஸ் சர்வதேசப்பள்ளி முதல்வர் ஜார்ஜினா, முன்னாள் மாணவர் சங்கத் தலைவர் ராஜ்குமார், டி.ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனியின் முழுநேர இயக்குநர் லட்சுமி நாராயணன் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் கேஎம்சிஎச் மருத்துவமனையின் மூத்த மனநல ஆலோசகர் டாக்டர் சீனிவாசன் இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார் நிகழ்வில் உரையாற்றிய அவர், மாணவர்களிடையே சுதந்திரம், ஒழுக்கம், உணர்வுசார் நல்வாழ்வு மற்றும் பொறுப்பான வளர்ச்சி ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினார்.

உண்மையான சுதந்திரம் என்பது விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் இல்லாத நிலை அல்ல என்றும், அது வெளிப்புறக் கட்டுப்பாட்டிலிருந்து சுயக் கட்டுப்பாட்டை நோக்கிய மாற்றம் என்றும் டாக்டர் சீனிவாசன் கூறினார்

நிகழ்வில், மாணவர்களின் கல்வித் திறன் மற்றும் சிறப்பான செயல்பாட்டிற்காக அவர்களுக்குப் பரிசுகள் வழங்கபட்டது. கல்வியில் சிறந்த செயல்பாட்டிற்கான'ஹவுஸ்'விருதை 'டைகர் ஹவுஸ்' அணி வென்று அசத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

# சுரண்டையில் நகர நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்



சுரண்டை நகர நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், நகரச் செயலாளர் அமல்ராஜ் தலைமையில் நடைபெற்றது முன்னாள் தொகுதி செயலாளர் கோல்டன் செய்யது அலி பாதுஷா, மாவட்ட பொருளாளர் செய்யதுஅலி பாதுஷா, தொகுதி இணை செயலாளர் ஜாகிர் உசேன், மாவட்ட அமைப்புச் செயலாளர் , ஆகியோர் முன்னிலை வைத்தனர். ஆனைகுளம், பாபநாசபுரம், சாம்பவர் வடகரை ஆகிய கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. டெங்கு காய்ச்சல் பரவி வருவதால் சுரண்டை நகராட்சி கொசு மருந்துகள் அடிக்க வும், கழிவுநீர் ஓடைகளில் குப்பை மேடுகளை அகற்றவும், சுகாதாரப் பணிகளை, நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், வருகின்ற உள்ளாட்சி தேர்தலில் அதிக இடங்களில் எஸ்டிபிஐ கட்சி போட்டியிட முடிவு செய்யப்பட்டுள்ளது, புதிய உறுப்பினர் சேர்க்கைமுகாம்அமைக்கவும், செய்யவும், அடிக்கடி மனித விபத்துக்கள் ஏற்படுவதைதடுக்கபள்ளிக்கூடங்கள் அருகில் வேகத்தடைகள் அமைக்கவும், உயிர்பலிகளை தடுக்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் துரிதநடவடிக்கைஎடுக்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, முன்னதாகநகர நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. நகரத் தலைவராக ஜாகிர் உசேன், நகர செயலாளராக அமல்ராஜ், பொருளாளராக சித்திக், தொழில்நுட்ப பிரிவுநிர்வாகிஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

# கோவை மாரத்தான் போட்டியில் 4,000க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு மாரத்தான் ஓடினர்



கோவை மாரத்தான் 7-வது பதிப்பு Sportzia நிறுவனம் சார்பில் மாரத்தான் போட்டி கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள தனியார் கல்லூரி மைதானத்தில் தொடங்கியது.

இந்த மாரத்தான் போட்டியில் நான்கு வயது முதல் 70 வயது முதியவர்கள் வரை கலந்து கொண்டு மாரத்தானில் ஓடினர்.மேலும் 21 கி.மீ,10 கி.மீ,5 கி.மீ மூன்று பிரிவுகளாக நடைபெற்ற மார்த்தான் போட்டியில் சுமார் 4,000 க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து 21 கிலோமீட்டர் மாரத்தான் போட்டியில் வெற்றி பெற்றவருக்கு முதல் பரிசாக 15,000 ரூபாயும்,10 கிலோ மீட்டர் வெற்றி பெற்றவர்களுக்கு பத்தாயிரம் ரூபாயும், 5 கிலோ மீட்டர் பிரிவில் வெற்றி பெற்றவர்களுக்கு 5000 ரூபாய் என பரிசுகள் வழங்கப்பட்டது.அதேபோல மாரத்தான் போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் பாராட்டு சான்றிதழ்களும் மற்றும் பதக்கங்களும் வழங்கப்பட்டது.

இந்த மாரத்தான் போட்டியில் கிடைக்கும் நிதி மூலமாக ஏழை எளிய,ஆதரவற்ற குழந்தைகளுக்கு குழந்தைகளின் கல்விக்காக பயன்படுத்துவதாக ஏற்பாட்டாளர் நந்தகுமார் தெரிவித்தார்.



# ஈரோடு வேளாளர் மகளிர் கல்லூரி பட்டமளிப்பு விழா: 2,073 மாணவிகளுக்குப் பட்டங்கள் வழங்கி பாரதியார் பல்கலைக்கழகப் பதிவாளர் வாழ்த்து

ஈரோடு திண்டலில் உள்ள வேளாளர் மகளிர் (தன்னாட்சி) கல்லூரியின் கஸ்தூர்பா காந்தி கலையரங்கில் பட்டமளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் ஆர். பார்வதி வரவேற்புரையாற்றி, ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தார். இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராகக் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் ஆர். ராஜவேல் கலந்து கொண்டு, 2022-2025 இளங்கலை மற்றும் 2023-2025 முதுகலைத் தொகுதியைச் சேர்ந்த 1,666 இளங்கலை மாணவிகளுக்கும், 407 முதுகலை மாணவிகளுக்கும் பட்டங்களை வழங்கி வாழ்த்திப் பேசினார். அப்போது அவர் பேசுகையில், ஒவ்வொரு பெண்ணும் தன்னம்பிக்கையுடனும் சுதந்திரமாகவும் வாழத் தரமான கல்வி அவசியம் என்றும்,வேலைவாய்ப்பு, சம ஊதியம், தொழில்முனைவோர் வாய்ப்பு, முறையான சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் மனநல ஆதரவு ஆகியவற்றில் பெண்களுக்குச் சம உரிமை கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மேலும், பெண்கள் தங்கள் சட்ட மற்றும் மனித உரிமைகளை அறிந்துதங்களைப்பாதுகாத்துக்கொண்டு இலக்குகளை அடைய வேண்டும் எனக் குறிப்பிட்ட அவர், பெண்கள் கல்வியறிவும், தன்னாட்சியும், அதிகாரமும் பெறும்போது அது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும்,சமூக மேம்பாட்டிற்கும் பெரும் பங்காற்றும் எனத் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் வெள்ளாளர் கல்வி அறக்கட்டளையின் தலைவர் சி. ஜெயக்குமார், செயலாளர் எஸ்.டி. சந்திரசேகர், பொருளாளர் பி.கே.பி. அருண்மற்றும்நிர்வாகக் குழு உறுப்பினர்கள், பேராசிரியர்கள், மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் திரளாகக் கலந்துகொண்டனர். நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது. இதனைத் தொடர்ந்து இந்த பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட மாணவிகள் மற்றும் அவரது பெற்றோர்கள் அனைவருக்கும் மதிய உணவு கல்லூரி நிர்வாகத்தின் சார்பாக வழங்கப்பட்டது.

# இலவச வேஷ்டி, சேலை நூல் விடுவிப்பு மற்றும் கூலி உயர்வு அறிவிப்பை உடனடியாக வெளியிட விசைத்தறி கூட்டமைப்பு கோரிக்கை



பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மக்களுக்கு வழங்கப்படும் இலவச வேஷ்டி மற்றும் சேலை உற்பத்திக்குத் தேவையான நூல்களை உடனடியாக விடுவிக்கக் கோரியும், புதிய வடிவமைப்புக்கு ஏற்ப கூலி உயர்வு அறிவிப்பை வெளியிட வலியுறுத்தியும் ஈரோட்டில் தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கைத்தறி துறை உதவி இயக்குநரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. மாநிலத் தலைவர் எல்.கே.எம். சுரேஷ் மற்றும் மாநில பொருளாளர் கே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் தலைமையில் ஈரோடு, சித்தோடு, லக்காபுரம்,வீரப்பன்சத்திரம் உள்ளிட்ட பல்வேறு சங்க நிர்வாகிகள் 100க்கும் மேற்பட்டோர் முன்னிலையில் இந்த மனு வழங்கப்பட்டது.

தமிழகத்தில் பல லட்சம் விசைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரமாக விளங்கும் இத்திட்டத்திற்கான அரசாணை கடந்த ஜூலை 1-ஆம் தேதி வெளியிடப்பட்டு முதற்கட்டமாக ரூ.300 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், 50 நாட்களுக்குமேலாகியும் நூல் டெண்டர் பணிகள் நிறைவடையாமலும், கூட்டுறவு நூற்பாலைகளில் இருந்து நூல் விடுவிக்கப்படாமலும் உற்பத்தித் தொடங்குவதில் தாமதம் நீடித்து வருகிறது. இதனால் கடந்த இரண்டு மாதங்களாக வேலை வாய்ப்பின்றி நெசவாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதால், உடனடியாக நூல்களை விடுவித்து உற்பத்திப் பணிகளைத் தொடங்குவதோடு, புதிய வடிவமைப்புக்கு ஏற்ப கூலி உயர்வையும் அரசு உடனே அறிவிக்க வேண்டும் என தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

# ஈரோடு மாநகர் மாவட்ட இந்து முன்னணி சார்பாக 38 ஆம் ஆண்டு ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி திருவிழா ஆலோசனைக் கூட்டம்



ஈரோடு மாநகர் மாவட்ட இந்து முன்னணி சார்பாக நடக்கவிருக்கும் 38 ஆம் ஆண்டு ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி திருவிழா ஆலோசனைக் கூட்டம் ஈரோடு மாநகர் சத்தி ரோட்டில் உள்ள மகேஸ்வரி ஹாலில் நடைபெற்றது,

இதில் ஈரோடு மாநகர் மாவட்டம் சார்பாக 1008 இடங்களில் ஸ்ரீ விநாயகர் திருவுருவ சிலை பிரதிஷ்டை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது,

ஈரோடு நகரில் செப்டம்பர் 14ஆம் தேதி சிலைகள் நிறுவப்பட்டு 17ஆம் தேதி விசர்ஜன ஊர்வலம் நடத்தவும் மற்றும் மாவட்டம் சார்பாக பல்வேறு பகுதிகளில் 20 ஆம் தேதி வரை ஸ்ரீ விநாயகர் விசர்ஜன ஊர்வலம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஈரோடு மாநகர் மாவட்ட தலைவர் ப. ஜெகதீசன் தலைமையில் , மாநில பொதுச் செயலாளர் J.S.கிஷோர்குமார் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில்

மாவட்ட பொதுச்செயலாளர்க.கார்த்தி,மாவட்டச் செயலாளர்கள் பொ.சங்கர் ,ஜெ.கார்த்திகேயன் , து.முரளி , ப. ரமேஷ் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆ.முருகன் ,மாவட்ட செயற்குழு உறுப்பினர் வெ.பழனி வேல், க. கவின் மற்றும் 200 மேற்பட்ட நகர ஒன்றிய விநாயகர் சதுர்த்தி கமிட்டி குழு பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.இதில் மாநில பொதுச்செயலாளர் ஜே எஸ் கிஷோர் குமார் வழிகாட்டினார்.

# தரமான அரிசியில் சமைத்து 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் மதிய உணவு திட்டத்தை விரிவுபடுத்த தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் சா.அருணன் வேண்டுகோள்



வரும் திங்கள்கிழமை நிதிநிலை அறிக்கை மானிய கோரிக்கையின் ஒருபகுதியாக பள்ளிக்கல்வித்துறை மானிய கோரிக்கை மீதான விவாதம் வரும் திங்கள் அன்று நடைபெறுகிறது மாணவர் நலன் மற்றும் ஆசிரியர்கள் நலன் சார்ந்த முக்கிய அம்சங்கள் இடம்பெற பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு ஆ.ராஜ்மோகன் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் சார்பில் கீழ்காணும் கோரிக்கைகள்

உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி பணியில் இருக்கும் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் கட்டாயம் மூன்று ஆண்டிற்குள் ஆசிரியர் தகுதி தேர்வு எழுதி தேர்ச்சியடைய வேண்டும் என தீர்ப்பு வழங்கியதன் அடிப்படையில் சென்ற ஆட்சியில் அப்போதைய பள்ளிக்கல்வித்துறைஅமைச்சர்திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களின் தலைமையில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து சங்க பிரதிநிதிகளுடன் ஆலோசனை கூட்டம் நடந்தது ஒருமித்த கருத்திற்கினங்க சிறப்பு ஆசிரியர் தகுதி தேர்வு நடத்த ஆணை வழங்கப்பட்டது கடந்த ஜூலை மாதம் சிறப்புதகுதி தேர்வு நடத்தப்பட்டது ஆனால் சிறப்பு தகுதி தேர்வாக இல்லாமல் எப்போதும் போல் வினாக்கள் வேலை தேடுநருக்கு கேட்கப்படும் வினாக்களை காட்டிலும் கடினமாக இருந்த்து

இந்த நிலையில் தான் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு ஆ.ராஜ்மோகன் அவர்கள் மீண்டும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கேட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து சங்க பிரதிநிதிகளை அழைத்து ஆலோசனை நடத்தினார் சிறப்பு தகுதி தேர்வு எவ்வாறு கடினமாக இருந்த்து என்பதை தெரிவித்மோம் அதாவது மொத்த மதிப்பெண்ணில் 40% விழுக்காடு மதுப்பெண் எடுத்தால் தேர்ச்சி என அறிவிக்க வேண்டும் பணிமூப்பு , உயர்க்கல்வி பட்டப்படிப்பிற்கும் 10% விழுக்காடு மதிப்பெண்ணும், கற்பித்தல் திறன் செய்முறைக்கு 10% விழுக்காடு மதிப்பெண்ணும் மற்றும் எழுத்துத்தேர்விற்கு 20% விழுக்காடு என 40% விழுக்காடு மதிப்பெண் எடுத்தால் போதுமானதாக அறிவித்து அனைவரையும் தேர்ச்சி பெற்றவர்களாக அறிவிப்பு செய்ய வேண்டும் என தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் கேட்டுக்கொண்டோம் இந்த கோரிக்கை ஏற்று அறிவிப்பு செய்ய வேண்டும்

ஒன்றாம் வகுப்பு முதல் முதல் எட்டாம் வகுப்பு வரை மாணவர்களுக்கு மட்டும் அரசு சீருடையுடன் காலில் அணிய ஷூவுடன் சாக்ஸ் வழங்கிவருகிறது இருந்தாலும் சரியாக அளவு எடுத்து வழங்கப்படுவதில் துணியின் ரகமும் சரியில்லாத நிலையில் அரசு கொடுக்கும் சீருடைக்கு பதிலாக பெரும்பாலான மாணவர்களுக்கு பெற்றோர்களே சீருடை வாங்கி கொடுக்கின்றனர் , ஆதலால் மாணவர்களுக்கு தரமான துணியை தேர்ந்தெடுத்து அந்தந்த பள்ளிக்கு தையல்காரரை பள்ளிக்கு வரவைத்து அளவெடுத்து தைத்துக்கொடுக்க வேண்டும் சீருடை நிறத்தை அந்தந்த பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலமாக தேர்வு செய்ய ஆணை வழங்க வேண்டும் எட்டாம் வகுப்பு வரை என்பதை 12ஆம் வகுப்ப வரை விரிவு படுத்தி மாணவர்களுக்கு சீருடை வழங்க வேண்டும்

பருவத்தேர்வுகள் திருப்புதல் தேர்வுகள் காலாண்டு அரையாண்டு தேர்வு முழு ஆண்டுத் தேர்வு உள்ளிட்ட அனைத்து மாணவர்களுக்கும் அனைத்து தேர்வுகளுக்கும் வினா தாள் மற்றும் விடைதாள் வாங்குவதற்கு மாணவர்களிடம் கட்டணம் வசூலிக்க கூடாது முழு செலவையும் அரசே ஏற்க வேண்டும்,

பள்ளியில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிறப்ப வேண்டும் , பல ஆண்டுகளாக அலுவலக உதவியாளர் பணியிடங்கள் , இரவு காவலர் பணியிடங்கள் , தூய்மை பணியாளர் பணியிடங்களை நிறப்ப வேண்டும்

மேற்கண்ட கொரிக்கைகளை நாளை பள்ளிக்கல்வி மானிய கோரிக்கையில் இடம்பெற செய்ய பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு ராஜ்மோகன் அவர்களை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

சா.அருணன் நிறுவனத் தலைவர் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு

## சர்வதேச சேவை அமைப்பான 'ரோட்டரி இன்டர்நேஷனல்' அமைப்பின் 122 ஆண்டுகால வரலாற்றில் முதன்முறையாகத்

# தமிழர் ஒருவர் சர்வதேச துணைத்தலைவராக பொறுப்பேற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்



தேனியில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், தமிழக முதல்வர் அவர்களின் தலைமையிலான அரசுடன் இணைந்து விரைவில் 3 முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகவுள்ளதாகத் தெரிவித்தார்.

அதன்படி, 500 நீர்நிலைகளைத் தூர்வாருதல் மற்றும் சீரமைத்தல், 500 டயாலிசிஸ் மையங்கள் மற்றும் மருத்துவ வசதிகளை ஏற்படுத்துதல்,500 கழிப்பறை / வாஷ் ஸ்டேஷன்கள் மற்றும் பள்ளி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.மேலும்,இளைஞர் தலைமைத்துவத்தை ஊக்குவிக்க 500 'ரைலா' (RYLA) பயிற்சிகளும் நடத்தப்படவுள்ளன.

உலகம் முழுவதும் 220-க்கும் மேற்பட்ட நாடுகளில் 12 லட்சத்திற்கும் அதிகமான உறுப்பினர்களுடன் இயங்கி வரும் ரோட்டரி அமைப்பில், இந்தியளவில் 5,000 சங்கங்களும் 2 லட்சம் உறுப்பினர்களும் உள்ளனர். இதில் தமிழகத்தை உள்ளடக்கிய மண்டலம் (Zone 5) 50,000 உறுப்பினர்களுடன் உலகிலேயே மிகப்பெரிய மண்டலமாகத் திகழ்கிறது.

உலக அளவில் போலியோ நோயை 99.9% ஒழித்த பெருமை ரோட்டரி அமைப்பையே சாரும். இந்தியாவில் போலியோ ஒழிக்கப்பட்டு 14 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் மட்டுமே தற்போது அதன் பாதிப்பு உள்ளது. அந்நாடுகளிலும் போலியோவை முழுமையாக ஒழிக்க ரோட்டரி தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

கல்வி,சுகாதாரம்,சுற்றுச்சூழல் மற்றும் தூய்மையான குடிநீர் வழங்குதல்போன்ற7 முக்கியத் துறைகளில் ரோட்டரி தொடர்ந்து சேவை ஆற்றும் என்றும் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

செய்தியாளர் சந்திப்பில் தேனி சென்ட்ரல் ரோட்டரி சங்கத் தலைவர் சுதாகர் செயலர் கணேஷ்பாடி பொருளாளர் லோகநாதன் மாவட்ட உறுப்பினர்கள் தக்கவைத்தல் தலைவர் சண்முகவேல் அறக்கட்டளை மாவட்டத்தலைவர் பிரபாகர் துணை ஆளுநர் கல்பனாதேவி ,மனோகரன், ஸ்டேன்லி ஜாய், மண்டல ஒருங்கிணைப்பாளர் உதயக்குமார் ஆகியோர் உடனிருந்தனர்

# ஈரோடு கோபிச்செட்டிப்பாளையத்தில் கோவை விஜிஎம் பல்துறை சிறப்பு மருத்துவ மையம் திறப்பு



கோவை விஜிஎம் மருத்துவமனையின் முதல்செயற்கைக்கோள் மருத்துவ மையமான "கோவை விஜிஎம் பல்துறை சிறப்பு மருத்துவ மையம்" ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிப்பாளையத்தில் நேற்று (ஆகஸ்ட் 23) பிரம்மாண்டமாக திறக்கப்பட்டது.

கோவை விஜிஎம் மருத்துவமனையின் கோபி கிளையை தமிழ்நாடு அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

ரோட்டரி மாவட்டம் 3203-ன் முன்னாள் ஆளுநர் ஏ.கே.எஸ்.கே. சண்முகசுந்தரம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

கோபிச்செட்டிப்பாளையம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு உலகத்தரத்திலான உயர்தர மருத்துவ சேவைகளை அவர்களது பகுதிக்கு அருகிலேயே வழங்கும் நோக்கில், கோவை விஜிஎம் மருத்துவமனை இந்த புதிய பல்துறை சிறப்பு மருத்துவ மையத்தை தொடங்கியுள்ளது. "தரமான மருத்துவ சேவை அனைவருக்கும் எளிதாகக் கிடைக்க வேண்டும்" என்ற நோக்கத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள இந்த மையத்தின் மூலம் கோபிச்செட்டிப்பாளையம், பவானி, அந்தியூர், சத்தியமங்கலம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் பல்வேறு சிறப்பு மருத்துவ ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகளை தங்களது பகுதிக்கு அருகிலேயே பெற முடியும். விஜிஎம் மருத்துவமனையின் நிறுவனர் மற்றும் தலைவர் டாக்டர் வி.ஜி. மோகன் பிரசாத், கடந்த 39 ஆண்டுகளாக கல்லீரல் மற்றும் இரைப்பைக் குடல் மருத்துவத் துறையில் சிறப்பான மருத்துவ சேவைகளையும் சமூகநலப் பணிகளையும் முன்னெடுத்து வருகிறார். அவரது தலைமையில் செயல்பட்டு வரும் விஜிஎம் மருத்துவமனை, நவீன மருத்துவத் தொழில்நுட்பம், திறமையான மருத்துவ நிபுணர்கள் மற்றும் நோயாளிகளைமையப்படுத்திய சிகிச்சை முறைகள் மூலம் கோவை மற்றும் சுற்றுவட்டார மக்களுக்கு உயர்தர மருத்துவ சேவைகளை வழங்கி வருகிறது. மக்களுக்கு அருகிலேயே உயர்தர மருத்துவ சேவைகளை வழங்கும் நோக்கில், கோவை விஜிஎம் மருத்துவமனையின் மருத்துவ சேவைகளை கோபிச்செட்டிப்பாளையம் மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமப்புற மக்களுக்கும் கொண்டுசெல்லும் முக்கிய முயற்சியாக இந்த முதல்செயற்கைக்கோள் மருத்துவ மையம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், அவசர மற்றும் சிக்கலான மருத்துவ நிலைகளில் தேவையான ஒருங்கிணைந்த சிகிச்சை வசதிகளை கோவை விஜிஎம் மருத்துவமனையின் பிரதான மையத்துடன் இணைந்து வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. கோவை விஜிஎம் மருத்துவமனை மருத்துவ இரைப்பைக் குடலியல், அறுவை சிகிச்சை இரைப்பைக் குடலியல், கல்லீரல் மருத்துவம், கல்லீரல்மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மருத்துவம், இதய மருத்துவம், புற்றுநோய் மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை, தலையீட்டு கதிரியக்கவியல், அவசர மற்றும் விபத்து சிகிச்சை, எலும்பியல், மூட்டு உள்நோக்கி சிகிச்சை மற்றும் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு உயர் சிறப்பு மருத்துவத்துறைகளில் சிறப்பான சேவைகளை வழங்கி வருகிறது. கோவை விஜிஎம் மருத்துவமனையின் கோபி கிளையை தமிழ்நாடு அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே. ஏ. செங்கோட்டையன் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

ரோட்டரி மாவட்டம் 3203-ன் முன்னாள் ஆளுநர் ஏ.கே.எஸ். கே. சண்முகசுந்தரம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். திறப்பு விழாவில் டாக்டர் வி.ஜி. மோகன் பிரசாத் வரவேற்புரையாற்றினார்.

தொடர்ந்து புதிய மருத்துவ மையத்தின் பெயர்ப்பலகை திறக்கப்பட்டது. டாக்டர் சுமன், கோவை விஜிஎம் மருத்துவமனையின் சிறப்பம்சங்கள் மற்றும் மருத்துவ சேவைகள் குறித்து விளக்கினார். டாக்டர் வம்சி மூர்த்தி, கோபிச்செட்டிப்பாளையத்தில் கோவை விஜிஎம் மருத்துவ மையம் அமைக்கப்பட்டதன் நோக்கம் மற்றும் இதன் மூலம் இப்பகுதி மக்களுக்கு கிடைக்கவுள்ள மருத்துவப் பயன்கள் குறித்துஎடுத்துரைத்தார்.

டாக்டர் மதுரா பிரசாத் மற்றும் டாக்டர் மித்ரா பிரசாத் ஆகியோர் புதிய மையத்தில் வழங்கப்பட உள்ளமருத்துவஆலோசனைகள், மருத்துவநிபுணர்கள், சிறப்பு மருத்துவப் பிரிவுகள் மற்றும் சேவைகள் குறித்து அறிமுகப்படுத்தினர்.

டாக்டர்கே.ஜி.ரங்கநாதன், டாக்டர் ரகுநாதன், டாக்டர்ரமேஷ்பாபு, டாக்டர் ஜி.பி. தனபால், டாக்டர் கே.எஸ். கணேசன், டாக்டர்சி.மோகன், டாக்டர் ஏ. குழந்தைசாமி, டாக்டர் குமரேசன் ஆகியோர் துவக்க விழாவில் பங்கேற்றனர்.

விழாவின் ஒரு பகுதியாக, விஜிஎம் மருத்துவக் குழுவினரின் சிறப்பான பங்களிப்பைப் பாராட்டும் வகையில் அவர்களுக்கு அங்கீகாரம் மற்றும் பாராட்டு வழங்கப்பட்டது.கோபிச்செட்டிப்பாளையம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அவர்களது பகுதிக்கு அருகிலேயே உயர்தர சிறப்பு மருத்துவ சேவைகளை வழங்கும் நோக்கில் தொடங்கப்பட்டுள்ள இந்த புதிய செயற்கைக்கோள் மருத்துவ மையம், இப்பகுதியின் மருத்துவ சேவையில் முக்கிய பங்காற்றும்எனஎதிர்பார்க்கப்படுகிறது.



# திமுக மற்றும் பாஜக இடையே ரகசிய உடன்பாட்டுக்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாக நான் நம்புகிறேன் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தூத்துக்குடியில் பேட்டி

தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த மதிமுக பொதுச்செயலாளர் வைகோ கூறியதாவது: கடந்த சட்டமன்றத் தேர்தல் வாக்கு எண்ணிக்கைக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, 'தேர்தல் முடிவு எப்படி இருக்கும்?' எனச் செய்தியாளர்கள் கேட்டபோது, தேர்தல் முடிவு அதிர்ச்சியளிக்கும் வகையில் இருக்கும் எனத் தெரிவித்திருந்தேன். தமிழக அரசு அலுவலகங்களில் லஞ்சம் ஒழிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சொன்னதைச் செய்து காட்டி சாதனை படைத்துள்ளார். கர்நாடக அரசின் அணை கட்டும் பணியைத் தொடக்கத்திலேயே தடுக்கத் தவறியது குறித்து சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பியபோது, திமுகவினரால் சரியான பதிலளிக்க முடியவில்லை.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாகனம் வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. அதை ஏற்பதும்,ஏற்காததும் அவரவர் தனிப்பட்ட விருப்பத்தைச் சார்ந்தது. திமுக மற்றும் பாஜக இடையே ரகசிய உடன்பாட்டுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக நான் நம்புகிறேன் என்று தெரிவித்தார்.

# தூத்துக்குடி மாநகராட்சியில் பிரதான மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை அமைச்சர் ஸ்ரீநாத் நேரில் ஆய்வு

தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட பெரியநாயகிபுரம் ஆபிரகாம் நகர் வழியாக உப்பாற்று ஓடைக்குச் செல்லும் பிரதான மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஆ.ஸ்ரீநாத் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத் தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்தும், அதன் வரைபடங்கள் குறித்தும் அதிகாரிகளுடன் அமைச்சர் நேரில் கேட்டறிந்தார்.

ஆய்வின் போது, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் விஷ்ணு மகாஜன், மாநகராட்சி ஆணையர்



சி.பிரியங்கா, மாநகராட்சிப் பொறியாளர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உடனிருந்தனர். மழைக்காலத்திற்கு முன்பாகப் பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

# விளாத்திகுளத்தில் மினி மராத்தான் போட்டி: ஜி.வி. மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்



விளாத்திகுளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பணியாற்றி மறைந்த உடற்கல்வி இயக்குநர் பால்சாமி நினைவாக முதலாம் ஆண்டு மினி மராத்தான் போட்டி விளாத்திகுளத்தில் கோலாகலமாக நடைபெற்றது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், கேரளா, கர்நாடகாஉள்ளிட்டபக்கத்து மாநிலங்களில் இருந்தும் ஏராளமான வீரர், வீராங்கனைகள் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர். ஆண்கள் மற்றும் பெண்களுக்குத் தனித்தனியாக நடைபெற்ற இப்போட்டியை திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினரும் சட்டமன்ற உறுப்பினருமான ஜி.வி. மார்க்கண்டேயன் கொடிய சைத்துத் தொடங்கி வைத்தார். விளாத்தி குளம் எட்டையாபுரம் சாலையில் 14 கிமீ தொலைவு கொண்ட ஆண்களுக்கான போட்டிகள் முதல் பரிசு ரூ 10 ஆயிரத்தை ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த மகேஷ், 2வது பரிசு ரூ 8 ஆயிரத்தை கர்நாடக மாநிலம் பெங்களூருவை சேர்ந்த சுரேஷ்குமார்,3வது பரிசு ரூ 5 ஆயிரத்தை ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த சிவானந்தம் ஆகியோர் பெற்றனர். 10 கிமீ தொலைவு கொண்ட பெண்களுக்கான போட்டியில் முதல் பரிசு ரூ 10 ஆயிரத்தை கேரளா மாநிலம் பாலக்காட்டைச் சேர்ந்த ஜென்சி ,2வது பரிசு ரூ 8 ஆயிரம்,3வது பரிசு ரூ 5 ஆயிரத்தை தூத்துக்குடி மாவட்டம் புதூரை சேர்ந்த உதய தர்ஷினி ,பவானி ஆகியோர் பெற்றனர். விழாவிற்கான ஏற்பாடுகளை விளாத்தி குளம் அரசு மேல்நிலைப்பள்ளி முன்னாள் மாணவர்கள்,வாக்கிங்ஃபிரண்ட்ஸ் ஆகியோர் செய்திருந்தனர்.போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் கோப்பை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் உடற்கல்வி இயக்குநர் வையணன், ஆசிரியர் சேகர், கிராம நிர்வாக அலுவலர் ஆறுமுகம், முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர்சுரேஷ்குமார், திமுக ஒன்றிய செயலாளர்கள் இம்மானுவேல், ராமசுப்பு, பேரூர் கழகச் செயலாளர்வேலுச்சாமி,காவல்துறை சார்பு ஆய்வாளர் நாராயணன்,சிறப்புசார்பு ஆய்வாளர் கோபால் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# குரும்பூர் ரெயில் நிலையம் அருகே விநாயகர் கோவில் இடித்ததை கண்டித்து பாஜக, இந்து அமைப்புகள் போராட்டம்!

குரும்பூர் ரயில் நிலையம் அருகே இருந்த விநாயகர் கோவில் இரண்டு நாட்களுக்கு முன்பு அதிகாலையில் இடித்து அகற்றப்பட்டது. இடிக்கப்பட்ட விநாயகர் கோவிலை உடனடியாக அதே இடத்தில் மீண்டும்



அகற்றப்பட்டதைக் கண்டித்து, அதே இடத்தில் கோவிலை மீண்டும் கட்டிவிநாயகர்சிலையை மறுபிரதிஷ்டை செய்யக் கோரி பொதுமக்கள் மற்றும் இந்து அமைப்புகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தூத்துக்குடி மாவட்டம் குரும்பூர் ரயில் நிலையம் அருகே பல ஆண்டுகளாக வழிபாட்டில் இருந்து வந்த விநாயகர் கோவில், கடந்த பக்தர்களின் வழிபாட்டில் இருந்த கோவில் இடிக்கப்பட்ட சம்பவம் அப்பகுதி பொதுமக்களிடையே பெரும் அதிர்ச்சியையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியது.

பல்லாண்டுகளாகப் வழிபாட்டில் இருந்த கோவில் அகக்கம் செய்யப்பட்டது பக்தர்களின் மத உணர்வுகளைப் பெரிதும் புண்படுத்தும் செயல் எனக் கூறி, கட்டி, விநாயகர் சிலையை முறைப்படி மறுபிரதிஷ்டை செய்ய வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.ஆர்ப்பாட்டத்தில் அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள், பாரதிய ஜனதாகட்சிநிர்வாகிகள் மற்றும் பல்வேறு இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள் திரளாகக் கலந்து கொண்டனர்.

# 'Three claps for marvellous set of Gen Z faces': CJP's Saurav Das takes swipe at BJP's outreach initiative



*Cockroach Janta Party on Sunday took a swipe at the BJP's new Gen Z outreach programme and its choice of leaders, sarcastically saying, "Three claps to the BJP for a marvellous set of 'Gen Z faces'."*

*Taking to X, party's chief spokesperson Saurav Das called out BJP National President Nitin Nabin for earlier calling the youth of the country "virus and cockroach" and comparing them with the "tukde tukde gang." "Wonderful decision by the BJP on "reaching out" to the Gen Z. Nitin Nabin recently called the young generation "virus and cockroach", protesters a part of "tukde tukde gang".*

*Das's reaction comes after BJP on Saturday constituted a dedicated team to spearhead its upcoming Gen Z Outreach Programme, aimed at strengthening engagement with young people across the country, news agency ANI reported.*

*"BJP National President Nitin Nabin, National General Secretaries Smriti Irani and Vinod Tawde, Gujarat Minister Harsh Sanghavi, Chhattisgarh Minister OP Choudhary, along with several other leaders, have been included in the team constituted for the outreach initiative," ANI reported citing sources.*

*Launching an attack on Smriti Irani, Das said that it should be "googled" why she was thrown out of the education ministry within two years. He also questioned her degree from what he said was "Yell University."*

*"And Smriti Irani... well well... just Google why she was thrown out of the Education Ministry within two years, in 2016. Her handling of Rohith Vemula's suicide case, her dismantling of public universities, her own questionable degree from "Yell University" give her great moral authority to lecture us young people."*

*Nabin on Saturday chaired the first introductory meeting of the BJP's newly constituted national team, formally marking the start of their tenure as party office bearers. The meeting began with a full rendition of 'Vande Mataram'.*

*The initiative is likely to focus on understanding the aspirations, concerns and expectations of Gen Z, while giving young people an opportunity to interact with BJP leaders and voice their views on issues affecting them.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.